2002 அக்டோபர் 28]

43–

பால் உற்பத்தி

***6869– திரு. பி.கே. சேகர்பாபு:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பார்—

(அ) தமிழ்நாட்டில் தினசரி பால் உற்பத்தியின் அளவு எவ்வளவு?

(ஆ) பால் உற்பத்தியாளர்களை பாதுகாக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) தமிழ்நாட்டில் தினசரி பால் உற்பத்தியின் அளவு 130 இலட்சம் லிட்டர்.

(ஆ) பால் உற்பத்தியாளர்களின் நலனைப் பாதுகாக்க அரசு எடுத்துவரும் நடவடிக்கைகள். பால் உற்பத்தியாளர்களின் கால்நடைகளுக்கு மருத்துவ வசதி, உற்பத்தியாளர்களின் கால்நடைகளின் இனப் பெருக்கத்திற்குத் தேவையான செயற்கைக் கருவூட்டல் வசதி, தரமான கால்நடைத் தீவனம், நியாயமான விலையில் கிடைக்க வழிவகை, ஆதிதிராவிடர் நலத் திட்டத்தின்கீழ் மானியத்துடன்கூடிய கறவை மாடுகள் வழங்கும் திட்டம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மை இனத்தைச் சார்ந்த பால் உற்பத்தியாளர்களுக்கு உதவி புரிய கறவை மாடுகள் கடன் திட்டம் போன்ற திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பால் உற்பத்தியாளர்களுக்கு இத்தகைய பாதுகாப்பு செய்து வருகின்றது. விவசாயத்தின் துணைத் தொழிலாக உள்ள பால் உற்பத்தியில் முன்பு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் வெண்மைப் புரட்சி ஏற்படுத்தப்பட்டது. இடைப்பட்ட காலத்தில் வெளி மாநில பால் உற்பத்தியாளர்களுக்கு உதவியாக வெளி மாநில பால் இங்கே விற்பனை செய்ய ஊக்கம் அளித்ததன் காரணமாக ஆவின் பால் விற்பனை பாதிக்கப்பட்டுள்ளது என்பது நாம் அனைவரும்

அறிந்த ஒன்று. வெளி மாநில பால் பல நாட்களானாலும் கெடாமல் இருக்க பாலில் ஹைட்ரஜன் பராக்சைடு, காஸ்டிக் சோடா, சோனாஸில் ஆகிய இரசாயனப் பொருட்கள் சேர்க்கப்பட்டு விற்பதால் குடல் சம்பந்தமாக நோய் வருவதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவாரா, அதனைத் தடுத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விற்பனை செய்யப்படுகிற பாலினுடைய தரத்தைச் சோதிப்பதற்கு தற்போது மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் சுகாதார ஆய்வாளர்கள் மூலமாகவும், இதர பகுதிகளில் இயக்குநர், மருத்துவ சேவை மற்றும் நோய் தடுப்புத் துறையின் மூலமாகவும், பால் பரிசோதனை ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பால் வளத் துறையின் மூலமாக மாதவரம் பால் பண்ணையில் தனியார் மற்றும் கூட்டுறவு பால் நிறுவனங்களின் பால் மற்றும் பால் பொருட்களின் தரத்தை ஆய்வு செய்ய பரிசோதனைக் கூடம் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. மேற்படி பரிசோதனைக்கூடம் செயல்படுவதற்கு மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டவுடன் உரிய நடவடிக்கை மேலும் தீவிரப்படுத்துவதற்கு எடுக்கப்படும்.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தனியார் பால் பாக்கெட்டுகள் அளவு குறைவாக விற்பதுடன் சென்னை மற்றும் சுற்றுப்புறங்களில் இந்த பால் நாள் ஒன்றுக்கு சுமார் 10 இலட்சம் லிட்டருக்கும் அதிகமாக விற்பனையில் உள்ளது. தமிழ்நாட்டில் விவசாய குடிமக்களுக்கு உதவிடும் வகையில் ஆவின் பால் விற்பனையைப் பெருக்க சென்னை மாநகரத்தில் மூடப்பட்டிருக்கின்ற நூற்றுக்கும் மேற்பட்ட தானியங்கி பால் விற்பனை நிலையங்களை அரசே திறந்திட முன்வருமா அல்லது முன்பு நடைமுறையில் உள்ள டெபாசிட் தொகையைக் குறைத்து தனியாருக்கு விட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல ஏற்கெனவே நடைபெற்றுக்கொண்டிருக்கிற தானியங்கி பால் வழங்கும் நிலையங்களில் நாள் ஒன்றுக்கு எந்த அளவுக்குப் பால் விற்பனை

2002 அக்டோபர் 28]

செய்யப்படுகிறது என்ற கணக்கு தற்போது எடுக்கப்பட்டு வருகிறது. அதிலே மிகக் குறைவாக பால் விற்பனை செய்கிற தானியங்கி பால் வழங்கும் நிலையங்களும், ஏற்கெனவே நடைபெறாமல் இருக்கின்ற தானியங்கி பால் வழங்கும் நிலையங்களும் கண்டறியப்பட்டு, விரைவில் உரிய நடவடிக்கை எடுத்து, அவற்றை தனியார் மூலமாகவோ அல்லது பால் வளத் துறையின் மூலமாகவோ செயல்படுத்துவதற்குண்டான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பா. பரணிகுமார்.

திரு. பா. பரணிகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

வினா எண் 44, திரு. ஜி. பழனிசாமி, செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

44–

நினைவு மண்டபம்

***3901–திரு. ஜி. பழனிசாமி:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சுதந்திரப் போராட்டத் தியாகி பி. சீனிவாசராவிற்கு திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் நினைவு மணிமண்டபம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் தியாகி சீனிவாசராவிற்கு நினைவு மணி மண்டபம் அமைக்கும் கருத்துரு தற்போது பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.